பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 | பிரமோதூத ஹூ ஆடி மீ 27 உ திங்கட்கிழமை (13-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 21 | கதிர்: 163

# இந்தியத் தூதர் - பிரேமா நாளை முக்கிய சந்திப்பு

## ஈழத் தமிழர் இனப் படுகொலை அகதிகள் விவகாரம் பேசப்படும்

கொழும்பு, ஆக. 13

இந்தியத் தூதுவர் திரு. எஸ். என். ஜாவும், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவும் நாளை சந்தித்துப் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் போது ஈழத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்படுவது குறித்தும் —

அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வதை தடுப்பதற்கான சூழ்நிலையைத் தோற்றுவிப்பது குறித்தும் முக்கியமாக ஆராயப்படும் என்று அறியப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் இப்போதைய நெருக்கடி நிலையால் எழுந்துள்ள விளைவுகள் பாதிப்புகள் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேசுவதற்கு இந்தியத் தூதுவர் திரு. ஜா முன்னர் மூன்று தடவைகள் முயன்றார்.

சந்திப்புக்கு முதலில் இணக்கம் தெரிவிக்கப்பட்டு நேரம் குறிக்கப்பட்டபோதிலும் பின்னர் கடைசி நேரங்களில் அவை ரத்துச் செய்யப்பட்டன.

திரு. ஜா கடந்த வாரம் புதுடில்லி சென்று பிரதமர் திரு. வி. பி. சிங் மற்றும் வெளியுறவு அமைச்சர் திரு. குஜ்ரால் ஆகியோருடன் பேச்சு நடத்தினார். அதன் பின் கொழும்பு திரும்பும் வழியில் சென்னையில் முதலமைச்சர் கருணாநிதியையும் சந்

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்கு முற்பணம்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் பணிபுரிந்து யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்து வந்த ஆசிரியர்கள் தமது சம்பள முற்பண காசோலைகளை இன்று முதல் கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ் கல்விப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்ததாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ)

## செங்கலடித் தாக்குதலில் 3 சிப்பாய்கள் உயிரிழப்பு

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு செங்கலடி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

இந்தச் சம்பவத்தில் 3 சிப்பாய்கள் உயிரிழந்ததாகவும் மூவர் காயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. (உ-5-9)

## யாழ். வந்தவர்கள் மீது மதவாச்சியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 13

கொழும்பில் இருந்து ரயில் மூலம் மதவாச்சிக்கு வந்தவர்கள், அங்கு ரயில் நிலையத்தில் வைத்து இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்ட ரயிலில் இவர்கள் வந்தனர். மதவாச்சியில் இருந்து புறப்பட்ட இராணுவப் பாதுகாப்புடனான பஸ்ஸில் ஏறுகையிலேயே இளம் வயதினரைப் பிரித்து நிறுத்தி இராணுவத்தினர் அவர்களைக் கடுமையாகத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு ஆளானவர்களிடம் இருந்து பெறுமதியான பொருள்களை இராணுவத்தினர் பறிமுதல் செய்ததாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (ஒ-3)

# வவுனியாவில் 16 தமிழ் இளைஞரை ராணுவம் கூட்டிச் சென்று கொலை!

யாழ்ப்பாணம், ஆக. 13

லொறியில் இருந்து பிஸ்கெட் இறக்க வேண்டும் என்று கூறி கூட்டிச் செல்லப்பட்ட 16 இளைஞர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வவுனியாவில் கடந்த 10ஆம் திகதி இச் சம்பவம் இடம் பெற்றது.

இராணுவத்தால் கூட்டிச் செல்லப்பட்டு உயிருடன் தப்பி வந்த ரம்பைக்குளத்தைச் சேர்ந்த செல்லையா தவச்சந்திரன் என்பவர் மூலம் இச்சம்பவம் பற்றித் தெரிய வந்துள்ளது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கடந்த 10 ஆம் திகதி காலை 10 மணியளவில் வவுனியா நகர எல்லைக்குள் வந்த இராணுவத்தினர் லொறியில் இருந்து பிஸ்கெட் இறக்க வேண்டும் என்று கூறி 17 இளைஞர்களை நகரப் பகுதிக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு கொண்டு சென்று அவர்களைத் தாக்கிவிட்டு கைகளைக் கட்டி ஒரு 'டிரக்' கில் போட்டு வெயிலில் விட்

(3ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைக்கு பொதிகள்

நேற்று மாலை 5. 30 மணியளவில் கோட்டைப் பகுதியில் விமானம் ஒன்று பொதிகளைப் போட்டது. பொம்மர்களும் வட்டமிட்டன. (ஒ)

## யாழ். மக்களை வெளியேற்றும் அரசின் யோசனைக்கு 5 அமைப்புகள் எதிர்ப்பு

இராணுவத் தாக்குதலை நடத்துவதற்காக யாழ். குடாநாட்டிலிருந்து அனைத்துத் தமிழ்மக்களையும் வெளியேற்றும் அரசின் யோசனைக்கு ஐந்து தமிழர் அமைப்புக்கள் பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன,

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ்.. ஈ. என். டி. எல். எவ். ரெலோ, ஈ. பி, டி. பி. ஆகியன அந்த அமைப்புகளாகும். (ஒ-எ)

## இந்தியா செல்வதற்காக 30,000 பேர் "தவம்"!

யாழ்ப்பாணம், ஆக. 13

இந்தியா செல்வதற்காக 30 ஆயிரம் அகதிகள் எருக்கலம்பிட்டி, பேசாலை, விடத்தல் தீவு பகுதிகளில் காத்திருப்பதாக நேற்று அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்,

திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து சென்றவர்களே இவர்களில் அதிகமானவர்கள் என்றும் அவர் கூறினார்:

உணவு வசதிகள் இன்றி அவர்கள் இன்னற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## பாலையூற்றில் கைதான 6 தமிழர்களும் எங்கே?

யாழ்ப்பாணம், ஆக. 13

திருகோணமலை, பாலையூற்றுப் பகுதியில் கடந்த மாதம் 6 ஆம் திகதி இடம் பெற்ற தேடுதலின்போது கைதான தமிழர்களில் 6 பேருக்கு என்ன நடந்தது என்பது இன்னும் தெரியவில்லை.

''தலையாட்டிகள்'' அடையாளம் காட்டியதை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

# ஏறாவூர் கிராமங்களில் சனி இரவு 125 முஸ்லிம்கள் கொலையுண்டனர்!

கொழும்பு, ஆக. 13

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூருக்கு அருகில் உள்ள ஆறு கிராமங்களுக்குள் புகுந்த இனந்தெரியாத குழுவினர் சனிக்கிழமை இரவு 9 மணிமுதல் நேற்று (ஞாயிறு) அதிகாலை 4 மணி வரை நடத்திய தாக்குதலில் 125 முஸ்லிம்கள் உயிரிழந்தனர். சுமார் 40 பேர் வரை காயமுற்றனர்.

பி. பி. சி. கொழும்புச் செய்தியாளரின் தகவலின்படி, உயிரிழந்தோரில் 46 பேர் ஆண்கள்; 56 பேர் பெண்கள்; 23 பேர் குழந்தைகள்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறையில் ஆறு முஸ்லிம்கள் கொல்லப்பட்டதை அடுத்து 20 தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்றும் கூறப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## புதுவையில் உண்ணாவிரதம்

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து ''தராசு'' பத்திரிகையின் ஏற்பாட்டில் தராசு மக்கள் மன்றம் நடத்தும் உண்ணாவிரதம் இன்று பாண்டிச்சேரி பஸ் நிலையத்தில் நடைபெறுகிறது.

''தராசு'' பத்திரிகை ஆசிரியர் திரு. ஷ்யாம் இந்த உண்ணாவிரதத்துக்கு தலைமை வகிப்பார். (உ-9)

## பொம்மர் தாக்குதலில் யாழ் நகரில் மாணவன் பலி

யாழ்ப்பாணம், ஆக. 13

நேற்று முன்தினம் சனியன்று மாலை யாழ் ஸ்ரீதர் தியேட்டர் பகுதியில் இடம் பெற்ற பொம்மர் தாக்குதலில் யாழ். மத்தியகல்லூரியின் பழைய மாணவனான கிருஷ்ணபிள்ளை சதீஸ்காந்தன் [வயது 20] என்பவர் மரணமானார்.

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட மாணவ முதல்வரான இவர் ஜீ.சி.ஈ. [சாதாரண தர] பரீட்சையில் எட்டுப் பாடங்களிலும் அதிவிசேட சித்தியும்' 1989 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ. [உயர்தர]

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### இடமாற்றம்

டில்கா வாச் வேக்ஸ் (DILKA WATCH WORKS) ஸ்தாபனம் ஆனைக் கோட்டை குளப்பிட்டி வீதி யில் அமைந்துள்ள தமிழ் பல் துறை சேவை ஸ்தாபனத்தில் நடைபெறுகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறி யத்தருகிறோம். (14006)

### கிளீன் கட்

யாழ். மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த கிளீன் கட் ஸ்தாபனம், பிறவுண் வீதியில் 37, சிவகுருநாதன் வீதி (நீராவியடி பிள்ளை யார் கோவிலுக்கு அண்மை யில்) தற்போது இயங்கி வரு கிறது. (C/5291)

### மீரா வெளியீடுகள்

சிறுவர்களுக்கும் பெரியவர் களுக்கும் 1989ல் 1990ல் வெளிவந்த தரமான நாவல் கள் 100/- ரூபாவுக்கு புத்த கங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கு புத்தகங் கள் இலவசமாக வழங்கப் படுகிறது. ஸ்ரீகாந் புத்தக சாலை, நல்லூர் கோயில் முன்புறம், யாழ்ப்பாணம். [13644]

### தேவை

கொண்டாவிலில் உள்ள வீடு ஒன்றில் ஒருவருக்கு இல வசமாக தங்குவதற்கு வசதி யுண்டு விபரங்களுக்கு C/o No. 145, உதயன். [13645]

# ஈராக்குக்கு மேலும் நெருக்குதல்கள்

## அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், ஆக. 13 ஈராக் மீது மேலும் பொரு ளாதார நிர்ப்பந்தங்களை விதிக்கப் போவதாக அமெ ரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்று அறிவித்தார். ஈராக்கின் எண்ணை வளை குடா ஊடாக கப்பலில் சந் தைக்கு அனுப்பப்படுவதைத் தடுக்கப் போவதாகவும் அதி பர் புஷ் மேலும் தெரிவித் தார். ஈராக் எண்ணெயை, வர்த் தகக் கப்பல்கள் ஏற்றிச் செல் வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அமெரிக்கா அறிவித்து இருக்கிறது. (உ – எ)

## வயிற்றோட்டம்

வல்வெட்டித்துறை, ஆக. 13 வடமராட்சிப் பகுதியில் வயிற்றோட்ட நோய் பரவ லாகக் காணப்படுகின்றது. சிறு குழந்தைகளே இந் நோய்க்கு ஆளாகின்றனர் அசாதாரண காலநிலையும் சீரான உணவின்மையும் போசாக்கின்மையுமே இதற் குக் காரணம் என்று கருதப் படுகிறது. (இ-160)

## அனுராவின் யோசனை

கொழும்பு, ஆக. 13 இனப்பிரச்சினைக்கு ஐக் கிய தேசியக்கட்சியும் சுதந் திரக் கட்சியும் ஒன்று சேர்ந்து தீர்வு காண வேண்டும். சுதந்திரக்கட்சி எம். பி. அனுரா பண்டாரநாயக்கா கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பேசுகை யில் முன்கண்டவாறு கோரிக்கை விடுத்தார். (இ – எ)

## நல்லூர் ஆலய வீதியில் நிற்பதைத் தவிருங்கள்!

### நிர்வாகம் மக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 13 நல்லூர் உற்சவத்துக்கு வரும் அடியார்கள் கூடிய வரையில் வீதியில் நிற்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகம் வேண்டு கோள் விடுத்துள்ளது. இறைவனைத் தரிசிக்க வரு வோர் ஆலயத்துக்குள் நிற்கு மாறும்— ஆலய பூசைகள் முடி வடைந்ததும் ஆலயத்துக்கு வெளியே நிற்காமல் வீடு களுக்கு திரும்புமாறும் ஆலய நிர்வாகம் மக்களிடம் வேண் டுகோள் விடுத்துள்ளது. இதே வேளை— நல்லூரில் நேற்று ஓரளவு அடியார் கூட்டம் அதிகரித் துக் காணப்பட்டது. (உ-10)

## அடியார்களை நோக்கி ஹெலி சூடு

பச்சிலைப்பள்ளி, ஆக. 13 கதிர்காமம் முருகன் ஆலய தீர்த்த உற்சவத்தையிட்டு வெம்போடுகேணி நவுன வெளி பாலையடி வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற விஷேச பூசையில் கலந்து கொண்ட அடியார்களை நோக்கி ஹெலியிலிருந்து துப் பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது. எவரும் காயம் அடையவில்லை. [இ117]

## அதிர்ச்சியால் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 13 ஷெல் அடியினால் அதிர்ச் சியுற்றவர் மரணமானார். ஏழாலையைச் சேர்ந்த எஸ். செந்தில்நாதன் [வயது 34] என்பவரே மரணமான வர். [இ-113]

## முஸ்லிம் கொலையை நிறுத்த அரசிடம் வேண்டுகோள்

புதுடில்லி, ஆக 13 இலங்கையில் முஸ்லிம்கள் கொல்லப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி அகில இந்திய இஸ்லாமிய சம்மேளனம் இலங்கை அர சைக் கோரியுள்ளது. சம்மேளனத் தூதுக்குழு ஒன்று புதுடில்லியில் இலங் கைத் தூதரைச் சந்தித்து அவரிடம் இது சம்பந்தமாக மகஜர் ஒன்றைச் சமர்ப்பித் தது. (இ-எ)

## மறுமலர்ச்சிக் கழக கூட்டம்

யாழ் - பல்கலைக்கழக மறு மலர்ச்சிக் கழக விஷேச, பொதுக்கூட்டம் நாளை 14 ஆம் திகதி காலை 9.30 மணிக்குக் கைலாசபதி கலை யரங்கில் நடைபெறவிருப் பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ - 3)

## போட்டிப் பரீட்சை கட்டணம்

யாழ்ப்பாணம், ஆக. 13 வங்கிகள், கூட்டுத்தாபனங் கள், சபைகளுக்கு எழுது வினைஞர் தர ஊழியர்களை சேர்ப்பதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் போட்டிப் பரீட்சை நடத்த உள்ளது. இப்போட்டிப் பரீட்சைக் கான கட்டணத்தை சுன்னா கம் தபாலகத்திலும் இன்று முதல் செலுத்தலாம். இப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 15 ஆம் திகதி ஆகும். சுன்னாகம் தபாலகத்தில் பதிவுத் தபால்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. (இ – மு)

## விடுகளில் உரல் - உலக்கை பாவனை

சாவகச்சேரி, ஆக. 13 மின்சாரம் இன்றி அரிசி, மா ஆலைகள் இயங்காத தால் வீடுகளில் உரல், உலக் கைச் சத்தங்கள் பரவலாகக் கேட்கின்றன. நெல் குற்றுதல், மா இடித் தல், தூள் இடித்தல் முன் போல் வீடுகளிலேயே இடம் பெற ஆரம்பித்துவிட்டன. (இ – 31)

## கொப்பேகடுவ கொடும்பாவி

யாழ்ப்பாணம், ஆக. 13 சனிக்கிழமை இரவு ஆனைக்கோட்டைப் பகுதி யில் வடபகுதி இராணுவத் தளபதி கொப்பேகடுவவின் கொடும்பாவி எரிக்கப்பட் டது. சாவகச்சேரியில் இருந்து வண்டி ஒன்றில், இராணுவ உடை அணிந்தபடி, படுக்க வைக்கப்பட்ட நிலையில் மாவிட்டபுரம் வீதியால் கொடும்பாவி இழுத்து வரப் பட்டது. (அ-9)


## மிருத்திஞ் ஜெய ஹோமம்

சண்டிலிப்பாய் வடக்கு இரட்டையர் புலம்

ஸ்ரீ ஞானவைரவ சுவாமி தேவஸ்தானம்

மேற்படி ஆலயத்தில் வைரவப் பெருமானின் வேண்டுகோளுக்கிணங்க, நாட்டின் தமிழ் மக்கள் நல் வாழ்வு வாழ வேண்டி எதிர்வரும் 14, 15, 16-08-1990 (செவ்வாய் புதன் வியாழன்) திகதிகளில் ஆலய முன்றலில், சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள் தலைமையில் குருகுல ஆசிரியர் தா. மகாதேவக்குருக் கள், விஸ்வ ஸ்ரீ நாராயணசர்மா ஏனைய குருமார்கள் இணைந்து மகா யாகத்தை நடாத்தி வைப்பார்கள் அடியார்கள் அனைவரும் கலந்து வைரவப் பெரு மானின், இஷ்டசித்திகளைப் பெற்று தமிழ் மக்கள் வெற்றி பெற வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
வைரவப் பெருமான்
அடியார்கள்.

[13646]



## இடமாற்றம்

★ மண்டேலா ரேடர் ★

இல. 02, பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் இயங்கி வந்த எமது புத்தக சாலை தற்போதைய நாட்டின் நிலை காரணமாக கீழ் காணும் முகவரியில் 01 - 08 - 1990 தொடக்கம் இயங் குகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கும், ஆதர வாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

மண்டேலா ரேடர்,
(புத்தகசாலை)
550/8A, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

[13973]


## 3 ஆம் வருட நினைவஞ்சலி

திருமதி நாகேஸ்வரி மனோசிவநாதன்

தோற்றம்: 22 - 11 - 1965
மறைவு: 18 - 7 - 1987

வாழ்க்கை இரதம் தடங்கலின்றி ஓடியபோது
வழி மறித்தான் பொல்லாக் காலனவன்
உன் பிரிவை நினைந்து உருகிநிற்கின்றோம்
உன் இனிய முகம் எம்முன் நிழலாடுகிறது.

நாயகன் நாதனுக்கு நலம் புரிய நீயில்லை
நற்றாற்றில் விட்டதுபோல் தவிக்கிறோம் நாம்
பிரிய லக்சனாவை, அன்பு அனுஷாவை
அரவணைக்க அன்னை நீ இங்கு இல்லை.

வருடங்கள் மூன்று ஓடி விட்டாலும்
உன் புன்சிரிப்பும் இனிய முகமும்
எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலா
இவ்வேளையில் உனை நினைந்து உருகுகிறோம் நாம்.

மூன்றாவது நினைவு தினமான இன்று உன்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உன் நினைவில் வாடும்
கணவன், மக்கள், தாய், தந்தை,
சகோதரர், மைத்துனர்கள், மைத்துனிமார்

நாகேஸ்வரி வாசம்,
வேலணை மேற்கு,
வேலணை.

[13647]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இமெல்டா பொன்றோஸ் டோமினிக்

தோற்றம்: 13 - 05 - 1933
மறைவு: 13 - 08 - 1989

அன்பின் இருப்பிடமே, அறிவின் பிறப்பிடமே
ஆற்றல் மிகுந்தவளே அனைவரதும் ஆதரவே
இல்லையென்று வந்தவர்க்கு இனிதுவந்து தந்தவளே
துன்பம் எவற்கேற்படினும் துயர் துடைத்து நின்றவளே
துடிக்குதம்மா எங்கள் நெஞ்சம், தூயவளே ஆவியானாய்
ஆண்டு பல சென்றாலும் ஆறாது எம் துயரம்.

உம் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள், உறவினர்,
அயலவர், கொழும்புத்துறை கிராம
சேவையாளர் பிரிவு மக்கள்.

(14010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாக்குதல்கள் இலக்கு மாறுவதால் கடைகள் இடம் மாறுகின்றன

யாழ்ப்பாணம், ஆக. 13
யாழ்ப்பாணத்தில் விமானத் தாக்குதல்கள் தினமும் புதிய புதிய இடங்களில் நடத்தப்படுவதால் நகரப் பகுதியில் உள்ள கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

முன்னர் குறிப்பிட்ட சில இலக்குகளை வைத்தே விமானத் தாக்குதல்கள் நடைபெற்றதால் அப்பகுதிகளில் இருந்த கடைகள் மட்டுமே அகற்றப்பட்டன.

ஆனால் தற்பொழுது இத் தாக்குதல்கள் இலக்கு எதுவுமின்றி நடப்பதே பல வர்த்தக நிலையங்கள் இடம் மாறுவதற்குக் காரணம் ஆகும்.

இதுவரை நடந்த தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான கடைகள் சேதம் அடைந்துள்ளன. பல கடைகள் தரை மட்டமாகி உள்ளன.

பாரிய இயந்திர வேலைகள் மேற்கொள்ளும் லேத் கடைகள்கூட இடம் மாற்றப்பட்டுவருகின்றன. [இ-10]

## “பிரித்தாளும் திட்டத்துக்கு பலியாகி விடக் கூடாது”

கொழும்பு, ஆக 13
பிரித்தாளும் திட்டத்திற்கு தமிழ் - முஸ்லிம் மக்கள் பலியாகி விடக்கூடாது என்று ஆறு தமிழ் அமைப்புகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ. பி. ஆர். எல். எப், ஈ என். டி எல். எப், புளொட், ஈ. பி. டி. பி. ஆகியவையே இந்த ஆறு தமிழ் அமைப்புகளும் ஆகும் (இ-எ)

## மகஜர்

சுழிபுரம், ஆக. 13
யாழ். மேற்குப் பகுதியின் போறாட் நிர்வாகிகள் யாழ். நிலைமை பற்றி கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு நீண்ட மகஜர் அனுப்பி வைத்துள்ளனர். [இ-28]

## 50 தமிழர்கள் கொலை என்கிறார் ரெலோ பிரதிநிதி

கொழும்பு, ஆக. 13
சவளக்கடையில் 50 தமிழர்கள் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்டனர்.

ரெலோ பிரதிநிதி ஒருவர் இதனைத் தெரிவித்தார் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று கூறுகிறது.

ஏற்கனவே 15 தமிழர் அம்பாறையில் ஊர்காவல் படையினரால் கொல்லப்பட்டனர் என்றும் இப்பிரதிநிதி தெரிவித்திருந்தார். [இ-எ]

## கிழக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறமாட்டார்களாம்

கொழும்பு, ஆக. 13
அச்சுறுத்தல் காரணமாக கிழக்கில் இருந்து முஸ்லிம்கள் ஒருபோதும் வெளியேற மாட்டார்கள். அப்படியான அச்சுறுத்தலை முஸ்லிம்கள் இராணுவ ரீதியில் உட்பட சகல வழிகளிலும் சமாளிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

வர்த்தக, வணிக அமைச்சர் ஏ. ஆர். மன்சூர்நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் பேசுகையில் இப்படித் தெரிவித்தார். [இ-எ]

உள்நாட்டு யுத்தம் நடக்கும் நாடுகளுக்கு

## ஆஸி. ஆயுதம் விற்பது இல்லை

கொழும்பு, ஆக. 13
ஆயுத விற்பனை பற்றிய விஷயத்தில் எமது நாட்டில் பல கட்டுப்பாடுகள் உள்ளன. உள்நாட்டு யுத்தம் நடக்கும் நாட்டுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வது ஆஸ்திரேலியாவில் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் செனட்டர் ஈவான்ஸ் வெள்ளிக்கிழமை இரவு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நடத்திய பேச்சின்போது ஆயுதங்களை விற்பது பற்றிய விஷயம் பேசப்படவில்லை என்றும் அவர் கூறினார். (இ-எ)

## அடுத்த ஆண்டுக்கான ஆசிரிய இடமாற்றத்துக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஆக. 13
அடுத்த ஆண்டுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் ஆசிரியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

கல்விச் சேவைகள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்தது.

ஒரே பாடசாலையில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தவர்களே இடமாற்றம் கோரி விண்ணப்பிக்கும் தகுதி பெற்றவர்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை பிராந்திய கல்விப் பணிப்பாளர் அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் —

விண்ணப்பங்கள் அந்தப் பிராந்திய கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## மேவுமிடர் தீர்ப்பாய்!

தொல்லை சூழ் வாழ்வு
தொடரும் துர் நிகழ்வு
அல்லல் போர் அனர்த்தம்
அவலம் பார் நித்தம்
இல்லை நீ யென்று
எண்ணும் நிலை வேண்டா
மெல்லக் கண் திறப்பாய்
மேவு மிடர் தீர்ப்பாய்

— அரியாலையூர் ராமண்ணா

[இன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய 18 ஆம் திருவிழா]

## அ.தி.மு.க. கோஷ்டிகள் இடையே கைகலப்பு: 43 பேர் காயம்

திருநாவுக்கரசு, சோமசுந்தரம் ஆஸ்பத்திரியில்

சென்னை, ஆக. 13
சென்னை நகரில் உள்ள அண்ணா தி.மு.க. தலைமையகத்தில் ஜெயலலிதா அணித் தொண்டர்களுக்கும், திருநாவுக்கரசு அணித்தொண்டர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில் 43 பேர் காயமடைந்தனர்.

போட்டி அ.தி.மு.க. பிரிவின் தலைவரான திரு. எஸ் திருநாவுக்கரசு நேற்று திடீரென்று அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தினுள் நுழைந்ததைத் தொடர்ந்தே கைகலப்பு ஏற்பட்டது.

பொலிஸார்விரைந்துசென்று கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பொலிஸார் பின்னர் தலைமைஅலுவலகத்தை மூடி சீல் வைத்துவிட்டு திறப்புகளை எடுத்துச்சென்றனர்.

திருவாளர்கள்எஸ். டி சோமசுந்தரம், கே. ஏ. கிருஷ்ணசாமி, எஸ். முத்துசாமி. எஸ். ஆர். ராதா, எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். ஆர். இராமச்சந்திரன். எஸ். டி. உ.கம்சந்த் ஆகியோர் கைதரனவர்களில் அடங்குவர்.

காயமடைந்த எஸ். டி. சோமசுந்தரம். எஸ. திருநாவுக்கரசு எஸ் டி உகம்சந்த், கே. கே. எஸ். ஆர். இராமச்சந்திரன் ஆகியோர் பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். [ஒ-எ]

## 55 வயதுக்கு முன்னரும் ஓய்வு பெற அனுமதி!

கொழும்பு, ஆக. 13
இருபது வருட சேவையைப்பூர்த்திசெய்த அரசஊழியர்கள் 55 வயதை எட்டும் முன்னரே ஓய்வு பெற விரும்பினால் அதற்கு அனுமதிப்பது என்று அரசு முடிவுசெய்திருக்கிறது.

இத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் அனைவருக்கும் ஓய்வூதியத்திட்டத்தின் சகலநன்மைகளும் கிடைக்கும் என்றும் அரசு அறிவித்து உள்ளது. [இ-எ]

வடக்கு--கிழக்கு சண்டை:

## சர்வதேச மத்தியஸ்த முயற்சியில் ஆஸி அமைச்சர்

கொழும்பு, ஆக. 13
வடக்கு-கிழக்கு சண்டையை நிறுத்துவது சம்பந்தமான சர்வதேச மத்தியஸ்த முயற்சிகள் பற்றி ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் செனட்டர் ஈவான்ஸ் கொழும்பில் இலங்கை அரசுப்பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

சர்வதேச மத்தியஸ்த முயற்சி சப்பந்தமான சில யோசனைகள் குறித்து இலங்கை அரசுப் பிரதிநிதிகளுடன் தாம் பேசியதாக ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் செனட்டர் ஈவான் தெரிவித்தார் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது. (இ-எ)

## கந்தரோடையில் கொடும்பாவி

யாழ்ப்பாணம், ஆக. 13
ஜனாதிபதி பிரேமதாசா, அமைச்சர் ரஞ்சன்விஜேரத்னகியோரின் கொடும்பாவிகளை கந்தரோடை பகுதி மக்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று எரித்தனர்,

ஊர்வலத்தின்போது கோஷங்களும் எழுப்பப்பட்டன. (ஓ)

## இனப்பிரச்சினை தீர்வுக்கு இப்படி ஒரு யோசனை!

கொழும்பு, ஆக. 13
இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஐந்து தமிழ் அமைப்புக்கள் புதிய யோசனைகள் அடங்கிய திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளன.

இத்திட்டம் விரைவில் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள சில அம்சங்கள் வருமாறு;—

★ வடக்கு - கிழக்கு பிரதேச சபை (Regional Council) ஒன்றை நிறுவுவது.

★ வடக்கு - கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும். இணைப்பை தீர்மானிக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடாது.

★ நிரந்தரமாக இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேச சபைப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் பாரம்பரிய பகுதிகளை உள்ளடக்கிய சுயாட்சிப் பிராந்தியம் [Autonomus Region] ஒன்றை அமைக்க வேண்டும்.

★ போதுமான அதிகாரங்களை வழங்கக் கூடிய முறையில் அதிகாரப் பரவலாக்கத் இடம்பெற வேண்டும்.

ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ், ஈ. பி. டி. பி., ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய தமிழர் அமைப்புக்களே இந்தத் திட்டத்தைத் தயாரித்துள்ளன. [ஒ-எ]

## ஈராக்கின் தற்கொலை படை

வளைகுடாவில் தரித்து நிற்கும் அமெரிக்க போர்க் கப்பல்களை தாக்கி அழிக்கும் தற்கொலைப் படைகளை ஈராக்கிய விமானிகள் அமைத்திருப்பதாக பக்தாத் வானொலி நேற்று அறிவித்தது. (உ-எ)

## பீரங்கிப் படகு

கொழும்புத்துறை கடற் பகுதியில் கடற்படை பீரங்கிப்படகு ஒன்று தரித்துநிற்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கொழும்புத்துறை இறங்குதுறையை அண்டியபகுதிகளில் சனிக்கிழமை இந்தப்படகு ரோந்து புரிந்ததாகவும் பின்னர் இறங்குதுறைக்கு அப்பால் சென்று அங்கு தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## சனக்கூட்டம்

குடாநாட்டிலிருந்து கொழும்பு மற்றும் பிற இடங்களுக்குச் செல்வதற்காகப் பெரும் எண்ணிக்கையானோர் நேற்று நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள பஸ் நிலையத்தில் கூடி நின்றதைக் காணமுடிந்தது. (உ-5)

## ஏறாவூர். . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

ஏறாவூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த எட்டுத் தமிழர்களை மருத்துவமனைக்குள் புகுந்த முஸ்லிம் குழு ஒன்று கொலை செய்ததாலேயே, முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர் என்று ரெலோ பிரதிநிதி ஒருவர் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்று மாலை அறிவித்தது.

காத்தான்குடி படுகொலையின் பின்னரும் முஸ்லிம் மக்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க பிரேமதாஸா அரசாங்கம் தவறிவிட்டது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப். எம். எச். எம். அஷ்ரப் நேற்று குற்றஞ் சாட்டினார்.

படுகொலைச் சம்பவங்களுக்கு அரசாங்கத்தின் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் அவர் குற்றம் சுமத்தியிருக்கிறார். (உ-எ)

## வவுனியா. . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டனர்.

அன்று இரவு ஒன்பது மணியளவில் அவர்களை ஹொரவப்பொத்தான 9 ஆம் கட்டைக்கு கொண்டு சென்று ‘டிரக்கில்’ இருந்து இழுத்துச் சுட்டுக் கொன்றனர்.

இந்தச் சம்பவத்தில் தப்பிய செல்லையா தவச்சந்திரன் என்பவரின் தம்பியும் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொலையுண்ட ஏனைய சிலரின் பெயர், விவரங்கள் வருமாறு:-

தர்மலிங்கம் [வயது 36] கணேசபுரம், ஆனந்தராஜா [வயது 30]-சமன்குளம், இராமலிங்கம் [வயது 40]-கோழியகுளம், குமாரி[வயது 24] -தச்சன்குளம். கிளி[வயது 20]-தச்சன்குளம், பிரபாகரன்[வயது 29]- தச்சன்குளம், குமார் [வயது ?8]- சாம்பைக்குளம். [இ-3]

## இந்தியத். . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தித்து அகதிகள்நிலை குறித்து நேரில் அறிந்துகொண்டார்.

நாளைய சந்திப்பும் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்படுமா என்று சந்தேகம் வெளியிடப்பட்ட போதிலும் அது நடைபெறும் என்று அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். [அ-3]

## பொம்மர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சையில் நான்கு பாடங்களில் அதிவிசேட சித்தியும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மத்தியகல்லூரி உருவாக்கிய சிறந்த விளையாட்டு வீரர்களுள் இவரும் ஒருவர்.

வானத் தாக்குதல் நடந்த சமயம் வீட்டில் நின்ற இவர் பொம்மர் ஒன்று தாக்குதல் நடத்த குத்திப் பதிந்து வருவதைக் கண்டு பதுங்குகுழியை நோக்கி ஓடியதாகவும்—

பதுங்குகுழிவாசலில்வைத்து பொம்மரின் ரொக்கட் குண்டுச் சிதறல்களினால் இவர் படுகாயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-9-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைத் தாக்குதலினால் வீடுகள், ரியூட்டரி சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 13

யாழ் நகரில் நேற்றுக் காலை இடம் பெற்ற விமானத் தாக்குதல்களினால் தனியார் ரியூட்டரி உட்பட பல வீடுகள் சேதமடைந்தன.

காலை 8.15 மணி அளவில் பலாலியில் இருந்து அசுர வேகத்தில் வந்த இரண்டு பொம்மர்கள் இத் தாக்குதலை மேற் கொண்டன.

ஒட்டுமடம் சந்தியில் உள்ள கடை ஒன்று.

மணிக்கூண்டு வீதியில் வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் ரியூட்டரி, மற்றும் சில கடைகள் ஆகியவையே சேதம் அடைந்தவை ஆகும்.

நாவலர் வீதியில் ரயில்வேக் கடவைக்கு அருகில் நேற்று மூன்றாவது நாளாக மேற்கொண்ட தாக்குதலில் மூன்று வீடுகள் சேதமடைந்தன. (இ-10)

# ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு பணிப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 13

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையின் சகல ஊழியர்களையும் இன்று வேலைக்கு சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவசர சிகிச்சை பெறும் நோயாளர்கள் மட்டுமே வைத்தியசாலையில் அனுமதிக்கப் படுவார்கள் என்றும், ஏனையோரைத் தத்தமது பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறும் பணிப்பாளர் கோரியுள்ளார், (ஒ-3)

## தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 13

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட மக்களுக்கான உள்நாட்டு, வெளிநாட்டுத் தபால் விநியோகம் இன்று நடைபெறும். [இ-10]

# சித்தாண்டியில் சிப்பாய்கள்பலி!

யாழ்ப்பாணம், ஆக. 13

மட்டக்களப்பு சித்தாண்டியில் கடந்த வியாழனன்று கால்நடையாக ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 3 சிப்பாய்கள் உயிரிழந்ததாகவும், மற்றொருவர் காயமுற்றதாகவும் தெரிய வருகிறது. (உ-5-9)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக.13

நேற்றுக்காலை யாழ்.கோட்டைப்பகுதியில்நடந்தமோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சேவியர் (எஸ் ஜூலிஸ் யோசரத்தினம்,மன்னார்) வீரமரணமடைந்தார். (உ-5-9)

## கப்பல் வரும்

யாழ்ப்பாணம், ஆக.13

கொழும்பில் இருந்து புறப்பட்ட ''லங்கா சிறி'' என்ற கப்பல் இன்று பருத்தித்துறை வந்துசேரும் எனத்தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் உணவுப் பொருள்கள் கொண்டு வரப் படுகின்றன. (ஒ-3)

## அரிசி விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 13

யாழ்ப்பாணத்தில் அரிசி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக வழங்கப்பட்டு வந்த அரிசி விலையும் கிலோ 19 ரூபா 50 சதத்தில் இருந்து 23 ரூபாவாக அதிகரித்துள்ளது. [இ-10]

## கொட்டகை அமைக்க கூரைத் தகடுகள்

யாழ்ப்பாணம், ஆக. 13

வலி - வடக்குப் பகுதியில் உள்ள அகதிகள் தங்குவதற்கென தற்காலிக கொட்டகைகள் அமைக்க ஐ. நா. ஸ்தானிகராலயம் 100 கூரைத்தகடுகளை வழங்கியது.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## கிழக்கில் ஆயுத பயிற்சி

கொழும்பு, ஆக. 13

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்குமேற்பட்ட சிங்கள, முஸ்லிம் இளைஞர்களுக்கு அரசு ஆயுதப்பயிற்சி வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஓய்வூதிய கிளை ஊழியர்

கொழும்புத்துறை, ஆக. 13

யாழ். செயலகத்தில் கடமையாற்றும் ஓய்வூதியக் கிளையின் சகலதர ஊழியர்களையும் தவறாது கடமைக்குச் சமுகம் தரும்படி யாழ். செயலக உயரதிகாரி பணித்துள்ளார். [இ-30]

## முதலுதவி சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஆக. 13

யாழ் - கல்வி அலுவலக முறைசாராப் பிரிவு மாணவர்களின் முதலுதவிச் சிகிச்சை முகாம் ஒன்று யாழ். சாதனா பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

முறைசாராக் கல்விப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது.

அதில் பயிற்சி பெற்றவர்கள் இந்த முகாமில் கடமையாற்றுகின்றனர். (இ-3)

# 24 மணித்தியாலத்தில் கிழக்கில் 170 பேர் கொலை

கொழும்பு, ஆக. 13

கிழக்கு மாகாணத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற சம்பவங்களின் போது முஸ்லிம்களும் தமிழர்களுமாக கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை 170 ஆகும் என்று கொழும்பு இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

★ ஏறாவூர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 8 தமிழர் முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர்.

★ ஏறாவூர் பகுதி கிராமங்களில் 119 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

★ சம்மாந்துறையில் 6 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

★ சம்மாந்துறையில் இதற்குப் பதிலாக 37 தமிழர்கள் கொலை செய்யப்பட்ட [உ-எ]

# ஏறாவூரில் ஊரடங்கு

கொழும்பு, ஆக. 13

ஏறாவூர்ப் பிரதேசத்தில் நேற்று இரவு 7 மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப் பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்கு நீக்கப்படுவதாக இருந்தது.

ஏறாவூரில் நேற்று உப பொலீஸ் நிலையம் ஒன்று திறக்கப்படவிருந்தது.

இதனை நிறுத்துமுகமாகவே முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் இடம்பெற்றன என்று பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய முஸ்லிம் பகுதிகளில் ஊர்காவல் படையினரை ஈடுபடுத்துவது என்றும்—

அப்பகுதிகளில் இராணுவ ரோந்தை அதிகரிப்பது என்றும் ஜனாதிபதி தலைமையில் நேற்று நடந்த மாநாடு ஒன்றில் தீர்மானிக்கப்பட்டது.

முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். [உ-எ]

# கொக்காவில் முகாமிலிருந்து தப்பி ஓடிய சிப்பாய்கள் சடலமாகக் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 13

கடந்த மாதம் கொக்காவில் இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது, முகாமிலிருந்து தப்பி ஓடி, அருகிலிருந்த காடுகளுக்குள் தஞ்சம் புகுந்த இரண்டு இராணுவச் சிப்பாய்களின் சடலங்களை விடுதலைப் புலிகள் கண்டு பிடித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இருவரினதும் சடலங்களுக்கு அருகில் இருந்து ரி-56 ரக ரைபிள்கள் இரண்டு, மகஸீன் ஆறு, 350 ரவைகள், ஜே. ஆர். ரக கிரனேட்டுகள் இரண்டு, ரி. என். ரி கிரனேட்டுகள் மூன்று ஆகியன விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டதாகவும் தெரிய வந்தது. (உ-9-5)

# சவூதிக்கு ஆதரவாக அரபுப் படைகள் விரைவு

லண்டன், ஆக. 13

ஈராக் ஆக்கிரமிப்பிலிருந்து சவூதி அரேபியாவை பாதுகாப்பதற்காக எகிப்து உட்பட பல அரபு நாடுகள் தமது படைகளை வளைகுடா நோக்கி அனுப்பிவைத்திருக்கின்றன.

ஏற்கனவேசவூதியைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவும், அமெரிக்காவுக்கு ஆதரவாக பிரிட்டன், பிரான்ஸ், கனடா,ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் தமது படைகளை வளைகுடாவுக்கு அனுப்பி வைத்திருந்தனஎன்பது தெரிந்ததே.

அரபுநாட்டுப்படைகள் சவூதிக்கு ஆதரவாகச் சென்றிருப்பதால் அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் தமது படைகளை வளைகுடாவிலிருந்துவிலக்கிக்கொள்ள வேண்டும் என்ற புதிய கோரிக்கை தற்போது அரபு நாடுகள் சிலவற்றினால் முன்வைக்கப் பட்டிருக்கிறது.

இதனிடையில்-

சவூதி அரேபியாவைஆக்கிரமிக்கும் எண்ணம் தனக்குக் கிடையாது என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்றுத் தெரிவித்தார். [உ-எ]

## அமைதித் தீர்வு சாத்தியமில்லை

வாஷிங்டன், ஆக. 13

குவைத்தை ஈராக் ஆக்கிரமிப்புச் செய்தது தொடர்பான விஷயத்துக்கு அமைதித் தீர்வு காணலாம் என்பதில் தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாக எகிப்து ஜனாதிபதி ஹுஸ்னி முபராக் தெரிவித்தார்.

இதனிடையில் —

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனை பதவியில் இருந்து கவிழ்க்கும் முயற்சியைத்தான் வரவேற்பதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்றுத்தெரிவித்தார்.[உ-எ]


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி சோமசுந்தரம்

(L. P. T. தொலைத் தொடர்புத் திணைக்களம்)

சின்னத்தம்பி சோமசுந்தரம் (L. P. T. தொலைத் தொடர்புத் திணைக்களம்) 12 – 08 – 90 இல் காலமானார். இவர் ஆ சின்னத்தம்பி தம்பதிகளின் புதல்வரும்; திருமதி சோமசுந்தரத்தின் அன்புக் கணவரும்; சுரேஸ்குமார் (அமெரிக்கா), டினேஸ்குமார், பிரியா ஆகியோரின் தந்தையும்; காலம்சென்ற சிவரட்ணம், சற்குணேஸ்வரி, யோகராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட் கிழமை 13 – 08 – 90 காலை 10-00 மணியளவில் 20, அம்மன் றோட்டில் அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
இ. சற்குணராசா

20, அம்மன் றோட்,
யாழ்ப்பாணம். (13649)

## சிவஸ்ரீ சு. விஸ்வநாதக்குருக்கள்

யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார் கோவில், முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகர் தேவஸ்தானம் ஆகியவற்றின் முன்னாள் பிரதம குரு சிவஸ்ரீ சு. விஸ்வநாதக் குருக்கள் அவர்கள் 06 – 08 – 90 அன்று திருச்சியில் (உறையூர்) சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 06 – 08 – 90 அன்று திருச்சி உறையூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்:
சி. விஸ்வநாத சர்மா
(மைத்துனர்)

கொக்குவில். [13643]

## கிருஷ்ணபிள்ளை சதீஸ்காந்தன்

கிருஷ்ணபிள்ளைசதீஸ்காந்தன் [முன்னாள்சிரேஷ்ட மாணவ தலைவன், யாழ். மத்திய கல்லூரி] அகால மரணமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, காந்தராணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், கிருஷ்ணகாந்தனின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சங்கானை விளாவெளி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
நண்பர்கள்

(13631)



## அறிவித்தல்

**ஈஸ்வர் கோப்பறேசன்**
**18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

எங்களிடம் திருத்தவேலைக்காக தந்த றேடியோக்கள், ரீ. வி. மற்றும் பொருட்களை திருப்பிப் பெற்றுக் கொள்ளுமாறு வாடிக்கையாளரைக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

19 [45] அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
211, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
[13650]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org